## வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழாவினை முதலமைச்சர்கள் மு.க.ஸ்டாலின் – பினராயி விஜயன் இணைந்து நடத்தியது;

# தென்னிந்திய அரசியலில் புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது!

## ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு சிறப்புக் கட்டுரை!

புதுடெல்லி, டிச. 22 -

**“வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் இணைந்து நடத்தியது தென்னிந்திய அரசியலில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது” என்று ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளேடு எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் கூறியுள்ளது.**


DAILY FROM: AHMEDABAD, CHANDIGARH, DELHI, JAIPUR, KOLKATA, LUCKNOW, MUMBAI, NAGPUR, PUNE, VADODARA

The Indian EXPRESS

JOURNALISM OF COURAGE SINCE 1932

THURSDAY, DECEMBER 19, 2024, NEW DELHI, LATE CITY, 22 PAGES ₹7.00 (₹8 BIHAR & RAIPUR, ₹15 SRINAGAR) WWW.INDIANEXPRESS.COM

How Periyar binds together: Significance of a meeting of Kerala, TN CMs

NIKHILA HENRY
NEW DELHI, DECEMBER 18

OF SEMINAL importance for the followers of Dravidian ideology, Vaikom in Kottayam, Kerala, saw the first-ever organised movement for rights of Dalits in 1924 as people from the oppressed castes launched the satyagraha to make public roads leading to the Sri Mahadeva temple in Vaikom accessible to all sections of society.

Among those who were an integral part of the satyagraha were social reformer E V Ramasamy, popularly referred to as "Periyar", who founded the Self-Respect Movement in the then Madras Presidency. Periyar and his wife Nagamma spent time in prison in connection with the movement. With entry to the paths leading to the temple paths restricted to dominant-caste Hindus, in March 1924 the Kerala Congress Committee called for a walk through the restricted paths, leading to the arrest of several of its leaders. It was only in 1936, 11 years later, that the oppressed castes were allowed entry into the temple.

On December 12, marking the centenary of his historical link between the two states, Tamil Nadu CM M K Stalin and his Kerala counterpart Pinarayi Vijayan met in Vaikom to inaugurate an inter-state collaborative project on social justice: a renovated Thanthai Periyar Memorial and Periyar Library.

In 2023, marking the commencement of the Vaikom Satyagraha's centenary celebrations, Stalin said, "It was through this movement that E V Ramasamy emerged as Periyar". Periyar means the respected or great one.

Periyar entered the Vaikom Satyagraha at a time when most of its leaders were arrested, according to author Pazha Athiyaman. "The Congress asked for Periyar's support when many of its leaders in Kerala were arrested. Periyar was a prominent Congress leader from Tamil Nadu," he said. Athiyaman's book Vaikom Porattom (Vaikom Struggle) details Periyar's contribution to the satyagraha.

Chief Ministers M K Stalin and Pinarayi Vijayan

According to Athiyaman, Periyar made several trips to Vaikom and was arrested more than once during the struggle. "He spent 67 days participating in the struggle and 74 days in prison for being arrested on account of the struggle," Athiyaman said. In his book, he writes that Periyar was first arrested when his campaign gained traction. On May 22, 1924, he was sentenced to simple imprisonment for one month, which he served in Arookutty prison. When he was let off, he returned to the struggle, leading to his arrest and a sentence of rigorous imprisonment for three months. Periyar was relentless in pursuing the struggle that he was called "Vaikom Veerar", or the "hero of Vaikom. "It is only apt that two Chief Ministers came together to remember Thanthai Periyar," said Athiyaman.

According to DMK leaders, the commemoration of Periyar by Stalin and Vijayan has marked a new chapter in southern politics. It has come at a time when the southern states are attempting to band together over common concerns linked to delimitation, demographic changes, and tax devolution.

"Here is a DMK CM collaborating with an alliance partner in INDIA, CPI(M)'s Pinarayi Vijayan. It sent the message that both the parties, and the INDIA bloc on the whole, are committed to social justice," said Madhimaran, a DMK leader who recently visited Vaikom to commemorate the satyagraha.

In their politics, however, both Stalin and Vijayan are candid that they are not against religion, the way Periyar was. DMK and CPI(M) leaders have time and again said that many of their cadre are believers and that they do not discourage anyone from practising religion. "Periyar was very clear about the right to temple entry being a right to enter a public place. So, there is a statement they (the two parties and their CMs) wish to make about temples and worship, not pitting themselves as non-believers or agonistics, but as people who are bent on claiming public spaces," said author and academic V Geetha.

The two leaders, however, have been vociferous critics of the BJP's Hindutva politics. "We want to say again and again that the BJP is against welfare politics and that the party is against social justice inscribed in the Constitution and the thoughts of Periyar," said Madhimaran.

Stalin has consistently said welfare measures cannot be called "revdi", or freebies, as the BJP does. "The message they are giving out is there is a very large scope for politics based on social justice movement in the southern states," Madhimaran said.

In 2022, Stalin launched an "All India Social Justice Forum" to unite the Opposition around the message of social justice and the event in Vaikom last year marked his outreach to Vijayan. "We share the same soul even if we are physically two," he told his Kerala counterpart at the time, peppering his speech with Malayalam.

இதுகுறித்து ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளேட்டின் 21.12.2024 தேதியிட்ட புதுடெல்லி பதிப்பில் நிகிலா ஹென்றி எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் கூறியிருப்பதாவது:-

ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் வைக்கம் ஸ்ரீ மகாதேவா கோயிலுக்குச் செல்லும் பொதுச் சாலைகளை, சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பயன்படுத்தும் உரிமைக்காக 1924ஆம் ஆண்டு கேரளாவின் கோட்டயத்தின் உள்ள வைக்கத்தில் தொடங்கிய சத்தியாகிரகப் போராட்டம், தலித்துகளின் உரிமைகளுக்காக முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட முதல், இயக்கமாகும். திராவிடச் சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் இப்போரட்டத்தை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர்.

**பெரியாரும் - அவர்தம் இணையரும் அனுபவித்த சிறை வாசம்!**

சத்தியாகிரகத்தின் முக்கிய அங்கமாக இருந்தவர்களில் முதன்மை யானவர் அன்றைய சென்னை மாகாணத்தில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவியவரும், சமூக சீர்திருத்தவாதியான ‘பெரியார்’ என அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி அவர்கள்தான். இப்போராட்டத்திற்காக, பெரியாரும் அவரது இணையர் திருமதி நாகம்மையாரும் சிறைவாசம் அனுபவித்தனர். ஆதிக்க சாதி இந்துக்கள் மட்டுமே செல்லக்கூடிய கோவில் பாதைகளுக்குள் நுழைய, மார்ச் 1924 இல் கேரள காங்கிரஸ் கமிட்டி தடை செய்யப்பட்ட பாதைகளில் நடக்க அழைப்பு விடுத்தது. இதனால், அதன் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். 11 ஆண்டுகளுக்குப் பிறகு 1936ல்தான் தாழ்த்தப்பட்ட சாதியினர் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

டிசம்பர் 12ஆம் தேதி, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையிலான வரலாற்றுப் பிணைப்பின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும், கேரள முதல்வர் பினராயி விஜயனும் வைக்கத்தில் சந்தித்து, சமூக நீதிக்கான மாநிலங்களுக்கு இடையேயான கூட்டுத்திட்டமான புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத்தைத் தொடங்கி வைத்தனர்.

**‘பெரியார்’ என்றால் ‘மரியாதைக்குரியவர்’ என்று பொருள்!**

2023ல் வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டுத் தொடக்க விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்த இயக்கத்தின் மூலம்தான் ஈ.வெ. ராமசாமி, பெரியாராக உருவெடுத்தார்” என்றார். ‘பெரியார்’ என்றால் ‘மரியாதைக்குரியவர்’ அல்லது ‘பெரியவர்’ என்று பொருள்.

வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலான தலைவர்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில்தான், இந்த போராட்டத்திற்குள் பெரியார் நுழைந்தார் என்று எழுத்தாளர் பழ. அதியமான் கூறுகிறார். “பெரியார் தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவராக விளங்கிய நிலையில், கேரளாவில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டபோது பெரியாரின் ஆதரவைக் கேட்டதாக, அதியமான் தான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’ என்ற புத்தகத்தில், வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பங்கினைக் குறிப்பிட்டுள்ளார்.

பெரியார், வைக்கம் நகருக்கு பல முறை பயணம் செய்துள்ளதாகவும், . போராட்டத்தின் போது ஒன்றுக்கு மேற்பட்ட முறை பெரியார் கைது செய்யப்பட்டதாகவும், போராட்டத்தில் ஈடுபட்டு 67 நாட்களும், போராட்டம் நடத்தியதற்காக 74 நாட்களும் சிறைவாசம் அனுபவித்தார் என்றும் அதியமான் குறிப்பிட்டுள்ளார். பெரியாரின் பிரச்சாரம் வலுப்பெற்றபோது முதலில் கைது செய்யப்பட்டதாக அவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**விடாப்பிடியாகப் போராடினார்! ‘வைக்கம் வீரர்’ என புகழ் பெற்றார்!**

மே 22, 1924 இல், வைக்கத்தில் பெரியாரின் பிரச்சாரங்கள் வீரியமடைந்ததைக் கண்டு, பெரியாருக்கு ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஆறுக்குட்டி சிறையில் அடைக்கப்பட்டார். சிறைத் தண்டனை முடிந்து விடுதலையான உடனே மீண்டும் அவர் போராட்டத்திற்குத் திரும்பினார். அப்போது, கைது செய்யப்பட்ட பெரியாருக்கு மூன்று மாத கடுங்காவல்தண்டனைவிதிக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக விடாப்பிடியாகப் போராடியதன் காரணமாக மக்கள் பெரியாரை ‘வைக்கம் வீரர்’ என்றும் ‘வைக்கம் நாயகன்’ என்றும் அழைத்தனர் என்று அதியமான தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், தந்தை பெரியாரின் நினைவைப் போற்றும் விதமாக, இரு மாநில முதல்வர்களும் ஒன்றிணைந்துள்ளது பொருத்தமானதாக உள்ளதாக அதியமான் கூறுகிறார்.

எல்லை நிர்ணயம், மக்கள்தொகை மாற்றங்கள் மற்றும் வரிப் பகிர்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய பொதுவான கவலைகளை தென் மாநிலங்கள் சந்தித்து வரும் வேளையில், அவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக வைக்கம் போராட்டம் நூற்றாண்டு நிறைவு விழா உள்ளதாகவும், முதலமைச்சர்கள் ஸ்டாலினும், பினராயி விஜயனும் இணைந்து பெரியார் நினைவேந்தல் நடத்துவது தென்னிந்திய அரசியலில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தி.மு.க. தலைவர்கள் குறிப்பிடுகின்றனர்.

**சமூக நீதி காக்க உறுதி பூண்ட விழா!**

“இந்தியா கூட்டணிக் கட்சியான சி.பி.எம்., பினராயி விஜயனுடன் இணைந்து செயல்படும் தி.மு.க. முதல்வர். இரு கட்சிகளும், ஒட்டுமொத்த இந்தியா கூட்டணியும் சமூக நீதியைக் காக்க உறுதி கொண்டுள்ளது என்ற செய்தியை இந்நிகழ்வின் வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளது” என வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கு பெற்ற தி.மு.க. பிரமுகர் மதிமாறன் கூறுகிறார்.

ஆனால், முதல்வர்கள் ஸ்டாலினும், பினராயி விஜயனும், தங்களின் அரசியலில் பெரும்பாலும் ஒத்த கருத்தை உடையவர்கள். இருவரும் பெரியாரைப் போல, மதத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்று வெளிப்படையாகவே இருக்கிறார்கள். திமுக மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் தொண்டர்கள் பலர் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும், மதத்தை பின்பற்ற வேண்டாம் என யாரையும் ஊக்கப்படுத்துவதில்லை என்றும் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

“கோயில் நுழைவு உரிமை என்பது பொது இடத்தில் நுழைவதற்கான உரிமை என்பதில் பெரியார் மிகத் தெளிவாக இருந்தார். எனவே, அவர்கள் (இரண்டு கட்சிகளும் அவர்களின் முதல்வர்களும்) கோயில்கள் மற்றும் வழிபாடுகள் குறித்து, தங்களை மத நம்பிக்கையற்றவர்கள் என்று காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் பொது இடங்களை அனைவரும் பயன்படுத்துவதில் சமூக நீதியை நிலைநாட்ட இருவரும் விழிப்புடன் இருக்கிறார்கள்” என எழுத்தாளரும், கல்வியாளருமான வி. கீதா கூறுகிறார்.

**பொதுநல அரசியல், சமூகநீதிக்கு எதிரானது பா.ஜ.க.!**

இரு தலைவர்களும் பா.ஜ.க.வின் இந்துத்துவா அரசியலை கடுமையாக விமர்சித்து வருவதாகவும், பா.ஜ.க பொதுநல அரசியலுக்கு எதிரானது என்றும், அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்ட சமூக நீதிக்கும், பெரியாரின் சிந்தனைகளுக்கும் எதிரான கட்சி என்றும் மீண்டும் மீண்டும் தாங்கள் கூற விரும்புவதாக மதிமாறன் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுவதை போல மக்கள் நலத்திட்டங்கள் என அழைக்காமல் ‘ரேவ்டி’ அல்லது இலவசங்கள் என பா.ஜ.க. கொச்சைப்படுத்துவதாக கூறினார். மேலும், “தென் மாநிலங்களில் சமூக நீதி இயக்கத்தின் அடிப்படையிலான அரசியலுக்கு மிகப் பெரிய வாய்ப்பு உள்ளதாக அவர்கள் வெளிப்படுத்தும் இந்தக் கருத்துக்கள் உணர்த்துகிறது,” என்று மதிமாறன் கூறினார்.

2022 ஆம் ஆண்டில், “அனைத்திந்திய சமூகநீதிக்கான கூட்டமைப்பு” என்ற இயக்கத்தைத் தொடங்கி, எதிர்க்கட்சிகளை சமூகநீதிக் குடையின் கீழ் ஒன்றிணைத்தார் ஸ்டாலின். கடந்த ஆண்டு வைக்கத்தில் நடந்த நிகழ்வு பினராயி விஜயனுடனான அவரின் உறவை சுட்டிக்காட்டியது. நாங்கள் உடலளவில் இரு தனி மனிதர்களாக இருந்தாலும், மனதளவில் ஒத்த கருத்துடைய ஒருவர் தான்” என கேரளாவில் மலையாளத்தில் உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அந்த சிறப்புக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!....முதல் பக்கத் தொடர்ச்சி

- இரயில்வே திட்டங்கள்,
- மெட்ரோ ரயில் திட்ட நிதி ஒதுக்கீடு,
- சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ்தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் இருப்பது,
- விவசாயிகள் கடன் தள்ளுபடி கோரிக்கை,
- விவசாயிகளுக்கான ‘பி எம். கிசான்’ திட்டத்தின்கீழ் போதிய நிதி ஒதுக்காதது,
- தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவுபடுத்துதல்,
- சுங்கச்சாவடிகளை ஒழித்தல்,
- நாட்டில் நிலவும் வேலை வாய்ப்பின்மை,
- நீதித்துறையில் பன்முகத் தன்மை கோரிக்கை,
- சிறுபான்மையினர் பொருளாதாரத் திட்டங்கள் பற்றிய கோரிக்கை,
- சிறுபான்மையினரைத் தாக்கிப் பேசிய உயர்நீதி மன்ற நீதிபதிக்கு நாடாளுமன்றக் கண்டனத் தீர்மானம்,
- ‘நீட்’ தேர்வு முறைகேடுகள்,
- வக்ப் வாரிய சட்டத் திருத்த எதிர்ப்பு,
- தமிழ்நாட்டின் விமான நிலையத் திட்டங்கள்,
- இந்திய - சீன எல்லைப் பிரச்சினை பற்றி வெள்ளை அறிக்கை கோரியது,
- சென்னை - தூத்துக்குடி ‘வந்தே பாரத்’,
- பேரிடர் மேலாண்மை நிதி ஒதுக்காதது,
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை,
- மதுரை ‘எய்ம்ஸ்’,
- நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்தி தினக் கூலியையும் உயர்த்துவது,
- அகழ்வாராய்ச்சிக்குத் தமிழ்நாட்டிற்கு ஏன் நிதி ஒதுக்கவில்லை;

இப்படி எண்ணற்ற திட்டங்களை, தமிழ்நாட்டின் உரிமைகளை எந்த மாநில எம்.பி.க்களைக் காட்டிலும் - தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய கழக எம்.பி.க்கள் எழுப்பியது எழுச்சியூட்டியது.

**நமது எம்.பி.க்களின் சாதனைகளை நான் மார்தட்டி அறிவிக்கிறேன்!**

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் தி.மு.க.வின் தலைவர் என்ற நிலையில் நம் எம்.பி.க்களின் சாதனைகளை மார்தட்டி அறிவித்துக்கொள்ள வேண்டியது முக்கியம் என்றே கருதுகிறேன்.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் குரலாகக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளை - எழுப்பிய மாநில உரிமை முழக்கங்கள் - ஜனநாயகத்தைப் பாழ்படுத்தும் “ஒரே நாடு ஒரே தேர்தலை” ஆணித்தரமாக எதிர்த்த நாடாளுமன்றக் குரல்கள் எல்லாம், பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான ஒன்றிய அரசின் செவிகளில் உரக்கவே விழுந்திருக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. அதன் மூலம் ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை - தமிழ்நாட்டு மக்களை ஓரவஞ்சனையுடன், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்த முடியாது என்ற செய்தியை அழுத்தந்திருத்தமாகக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள் நமது எம்.பி.க்கள்!

**உரிய நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்!**

இனியும் ஒன்றிய அரசு திருந்தவில்லை என்றால் தமிழ்நாட்டின் உரிமைகளைத் தர வில்லையென்றால் தமிழ்நாட்டு மக்கள் உரிய நேரத்தில் மீண்டும் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பது உறுதி!

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பூ.பாஸ்கர் தலைமையில் - சைதை மேற்குப் பகுதி

## கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

சென்னை, டிச.22-

சைதை மேற்கு பகுதி கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் பகுதி அமைப்பாளர் பூ.பாஸ்கர் தலைமையில் இன்று நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆலோசனை வழங்குகிறார்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பிற்கிணங்க சைதை மேற்கு பகுதி கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை சார்பில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

பகுதி அமைப்பாளர் பூ.பாஸ்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எனது (பூ.பாஸ்கர்) தலைமையிலும், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு முன்னிலையிலும், சைதாப்பேட்டை, பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (22.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவையைச் சார்ந்த நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், ஆர்.ரமேஷ், த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இக்கூட்டத்திற்கு சைதைமேற்கு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, கழக ஆக்கப்பணிகள் குறித்தும் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தும் ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையைச் சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு கலை இலக்கிய பகுத்தறிப்பேரவை சைதை மேற்குப் பகுதி அமைப்பாளர் பூ.பாஸ்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.